### வாசிப்பை ஊக்குவிக்கும் தவறவிடக் கூடாத நிகழ்வாக

# ‘தி.மு.க. 75 - அறிவுத் திருவிழா’வை நடத்திக்காட்டிய உதயநிதி ஸ்டாலின் - இளைஞர் அணித் தம்பிமார்களுக்கு பாராட்டுகள்!

## முற்போக்கு புத்தகக் காட்சியைப் பார்வையிட்டு – வலைதளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, நவ.18-**

**“தி.மு.க. 75 அறிவுத் திருவிழா”-வில் அமைக்கப்பட்டுள்ள முற்போக்கு புத்தகக் காட்சியைப் பார்வையிட்டது குறித்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது:-**





தி.மு.க. 75 அறிவுத் திருவிழா முற்போக்குப் புத்தகக் காட்சி: கொள்கைக் கருவூலம்!

வள்ளுவர் கோட்டத்தில் இரண்டு மணி நேரத்துக்கு மேல் இருந்து திராவிடம், அம்பேத்கரியம், கம்யூனிசம், பெண்ணியம் என அணிவரிசையில் அமைந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட அரங்குகளைப் பார்வையிட்டு, அங்கு வந்திருந்த வாசகர்கள், ஆர்வலர்கள், பதிப்பகத்தாருடன் உரையாடியது மனநிறைவளிக்கும் அனுபவமாக அமைந்தது.

குறிப்பாக, ‘Carry on, but remember’ எனும் பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைகளின் தொகுப்பைக் கண்டதும் நம் அண்ணன் அன்று விடுத்த எச்சரிக்கை இன்றைய ஒன்றிய ஆட்சியாளர்களுக்கும் பொருத்தமாக இருக்கிறதே என வியந்தேன். என் பங்கிற்கு, அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களை வாங்கிவிட்டேன்.

வாசிப்பை ஊக்குவிக்கும் தவறவிடக் கூடாத நிகழ்வாக இதனை நடத்திக் காட்டியுள்ள திரு. உதயநிதி ஸ்டாலின் மற்றும் அவரது தி.மு.க. இளைஞர் அணி தம்பிமார்களுக்கு மீண்டுமொரு முறை எனது பாராட்டுகள்! வரும் ஆண்டுகளிலும் தொடரட்டும் அறிவுத்திருவிழா!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.11.2025) ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற ”சென்னை ஈ–ஸ்போர்ட்ஸ் குளோபல் சாம்பியன்ஷிப் 2025 (Chennai Esports Global Championship 2025) போட்டியின் இரண்டாம் கட்டமாக நடைபெற்ற பி.ஜி.எம்.ஐ. போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பை மற்றும் பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்வில் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### ஒரே நபருக்கு 7 வாக்காளர் அடையாள அட்டை வழங்கிய தேர்தல் ஆணையம்!

# வாக்குத்திருட்டின் மற்றொரு முகம்!

*ஜெய்ப்பூர், நவ.18-*

ராஜஸ்தான் மாநிலம், சீர்மாதுபுர் பகுதியில் வசிக்கும் மேகராஜ் பட்வா என்ற நபருக்கு, ஒரே நேரத்தில் ஏழு வெவ்வேறு வாக்காளர் அடையாள அட்டைகள் (Voter ID Cards) வழங்கப்பட்ட விவகாரம், தேர்தல் நடைமுறைகளின் வெளிப்படைத்தன்மை குறித்து பெரும் கேள்விகளை எழுப்பியுள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த மேகராஜ் பட்வா, முதல் முறையாக வாக்காளர் அட்டையைப் பெற விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பித்த சில நாள்களிலேயே, அவருக்கு ஒன்றுக்குப் பதிலாக ஏழு தனித்தனி வாக்காளர் அடையாள அட்டைகள் அவரது வீட்டிற்கு வந்து சேர்ந்தன. இந்த ஏழு அட்டைகளிலும் வெவ்வேறு தேர்தல் ஒளிப்பட அடையாள அட்டை எண் பதிவு செய்யப்பட்டிருந்தன.

மேகராஜ் பட்வா இந்த விவகாரம் குறித்துப் புகார் அளித்தபோது, அதிகாரிகள் சுதாரித்துக்கொண்டு சரி செய்யாமல், இதை வெளியில் கூறவோ சமூக வலைதளங்களில் வெளியிடவோ வேண்டாம் என்று மிரட்டி உள்ளனர்.

இது தொடர்பாக மேகராஜ் பட்வா கூறும்போது, உள்ளூர் பா.ஜ.க. பிரமுகர் ஒருவர் தேர்தல் வாக்காளர் அடையாள அட்டைப் பெற்றுத்தர உதவுவதாகக் கூறி ஆவணங்களை வாங்கிச் சென்றார் என்றார்

நாடு முழுவதும் பா.ஜ.க.வினரும், தேர்தல் ஆணையமும் சேர்ந்து மோசடிகளைத் தொடர்ந்து நடத்துவதும் இதன் மூலம் உறுதியாகி உள்ளது.

இந்த ஏழு அட்டைகளும், ஏழு வெவ்வேறு நபர்களால் தவறாகப் பயன்படுத்தப்பட்டால், அதன் விளைவு என்னவாக இருக்கும்?

நாடு முழுவதும், “வாக்கைத் திருடுவோர், பதவியிலிருந்து விலகு!” என்ற முழக்கத்துடன் பிரச்சாரத்தை காங்கிரஸ் கட்சி, முன்னெடுத்து, இதைத் தேர்தல் முறைகேடுகளுக்கு ஓர் உதாரணமாகச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த விவகாரம் குறித்துப் பல்வேறு தரப்பிலிருந்தும் உயர் மட்ட விசாரணைக்குக் கோரிக்கைகள் வலுத்துள்ளன.

# “தி.மு.க. 75 அறிவுத் திருவிழா” - முற்போக்கு புத்தகக் காட்சி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு – புத்தகங்கள் வாங்கினார்!

**சென்னை, நவ.18-**

**“தி.மு.க. 75 அறிவுத் திருவிழா”வில் அமைக்கப்பட்டுள்ள முற்போக்கு புத்தகக் காட்சியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு, புத்தகங்களை வாங்கினார்.**

**அதன் விவரம் வருமாறு :-**

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.11.2025) சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறும் “தி.மு.க. 75 அறிவுத் திருவிழா”வில் அமைக்கப்பட்டுள்ள முற்போக்கு புத்தகக் காட்சியைப் பார்வையிட்டு, 63 புத்தகங்களை வாங்கினார்.

முற்போக்கு புத்தகக் காட்சிக்கு வருகைபுரிந்த முதலமைச்சர் அவர்களை கழக இளைஞர் அணியினர், கழக நிருவாகிகள், வாசகர்கள், ஆசிரியர்கள், பதிப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் இன்முகத்தோடு வரவேற்றனர்.

கழக இளைஞர் அணி சார்பில் நடைபெற்ற திமுக 75 முப்பெரும் அறிவுத் திருவிழா 8.11.2025 முதல் 16.11.2025 வரை நடைபெற்று வருகிறது.

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.11.2025 அன்று சென்னை, வள்ளுவர் கோட்டத்தில், முற்போக்கு புத்தகக் காட்சியினைத் திறந்து வைத்தார்.

மேலும், அங்கு அமைக்கப்பட்டுள்ள அரங்குகள், திமுக 75 வரலாற்றுக் கண்காட்சி மற்றும் “தன்மானம் காக்கும் கழகம்” மேடை நாடகத்தினை பார்வையிட்டார். பின்னர், இருவண்ணக் கொடிக்கு வயது 75 கருத்தரங்கத்தினை தொடங்கி வைத்து, “காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு” நூலினையும் வெளியிட்டார்.

அதைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் (16.11.2025) கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், முற்போக்கு புத்தகக் காட்சியை சுமார் இரண்டரை மணி நேரம் பார்வையிட்டார். அப்போது, அங்கிருந்த மாணவர்கள், புத்தக பதிப்பாளர்கள், எழுத்தாளர்களுடன் கலந்துரையாடினார்.

முதலமைச்சர் அவர்கள், அனைத்து புத்தக அரங்குகளுக்கும் நேரடியாகச் சென்று 63 புத்தகங்களை தேர்வு செய்து வாங்கினார். அதில், திராவிட இயக்க புத்தகங்கள், வரலாறு புத்தகங்கள், இலக்கிய புத்தகங்கள், சுயசரிதை புத்தகங்கள் போன்ற பல்வேறு தலைப்புகளில் புத்தகங்களை படித்துப்பார்த்து வாங்கினார்.

திமுக 75 அறிவுத் திருவிழாவில், அமைக்கப்பட்டுள்ள புத்தகக் காட்சியில் 56 அரங்குகளில் பல்வேறு புத்தகப் பதிப்பாளர்களின் புத்தகங்களை விற்பனைக்கு வைத்திருந்தார்கள். இங்கு, நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள், இளைஞர்கள் பார்வையிட்டு, பல்வேறு புத்தகங்களை வாங்கி பயனடைந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மாபெரும் அறிவுத் திருவிழாவினை வெற்றிகரமாக நடத்திவருவதற்கு கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டினார்.

இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சட்டமன்ற உறுப்பினர் மரு.நா.எழிலன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழு தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, சென்னை மாநகர நூலக ஆணையக் குழு உறுப்பினர் கவிஞர் மனுஷ்ய புத்திரன் மற்றும் கழக நிருவாகிகள் உடனிருந்தனர்.

### செஞ்சி ஒன்றியத்தில்

# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் ஆய்வு!

*செஞ்சி, நவ. 18-*

செஞ்சி ஒன்றியத்தில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கிட்டு படிவம் வழங்கும் பணியினை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கிட்டு படிவம் வழங்கும் பணி விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்று வருகிறது. செஞ்சி ஒன்றியம் கோணை ஊராட்சி பாகம் எண் 237, 240 அப்பம்பட்டு மற்றும் கவரை ஊராட்சி பாகம் எண் 284 கவரை மெயின் ரோடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில்வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருதற்கான கணக்கீட்டு படிவம் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான பணிகளை தி.மு.க. நிர்வாகிகள், பாகம் முகவர்கள். டிஜிட்டல் டிஜிட்டல் ஏஜென்ட் நிர்வாகிகள் மிகுந்த கவனத்துடன் மேற்கொள்ள வேண்டும் என நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தினார்.

ஆய்வின்போது செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகத்தின் மாநில செயற்குழு உறுப்பினர் சையத் உஸ்மான், மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, வனக்குழு தலைவர் ராமு, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் வாகித், நிர்வாகிகள் மணிபாலன், வீரப்பன், முத்து, நாகமுத்து உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### இன்று 89-வது நினைவு நாளான ‘தியாகத் திருநாள்’!

# வ.உ.சி. திருவுருவச் சிலைக்கு மாலை !

## அமைச்சர்கள் அணிவிக்கின்றனர்!

*சென்னை, நவ.18-*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் நினைவு நாளை “தியாகத் திருநாள்” எனக் கடைப்பிடிக்குமாறு 3.9.2021 அன்று சட்டப்பேரவையில் அறிவித்தார்கள். அதன்படி, தமிழ்நாடு அரசின் சார்பில், அமைச்சர் பெருமக்கள், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 89ஆவது நினைவு நாளான இந்த ஆண்டின் ”தியாகத் திருநாள்” இன்று (18.11.2025) காலை 9.30 மணியளவில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அவருடைய திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்துகிறார்கள்.

செக்கிழுத்த தியாகச் செம்மல் ! கப்பலோட்டிய தமிழன்! வ.உ.சிதம்பரனார் அவர்கள், தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் உலகநாதன் பிள்ளை பரமாயி அம்மையார் தம்பதியருக்கு 5.9.1872 அன்று மகனாகப் பிறந்தார்கள். ஒட்டப்பிடாரத்தில் அடிப்படைக் கல்வியையும், தூத்துக்குடியில் உயர்நிலைக் கல்வியையும், சட்டக் கல்வியைத் திருச்சியிலும் பயின்று வழக்குரைஞர் ஆனார்கள்.

வ.உ.சிதம்பரனார் சமூக சேவையிலும் அரசியல் பணியிலும் படிப்படியாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்கள். தாய்நாட்டின் விடுதலைக்காகத் தமிழ்நாட்டிலிருந்து பாடுபட்ட தலைவர்களில் முதன்மையானவராகத் திகழ்ந்தார்.

அரசியல் வாழ்க்கையில் பாலகங்காதர திலகரைத் தமது குருவாக ஏற்றுக் கொண்டு ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை அடியோடு ஒழித்திடப் பாடுபட்டார். ஆங்கிலேயரின் கப்பல் வாணிகத்தை முறியடித்திட அரசியல் ரீதியாகவும், வணிக ரீதியாகவும், தூத்துக்குடியில் “சுதேசி நாவாய்ச் சங்கம்” என்ற கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார். இதனாலேயே “கப்பலோட்டிய தமிழன்” எனப் பெயர் பெற்றார்.

வ.உசிதம்பரனாரின் சுதந்திரப் போராட்ட நடவடிக்கைகளால் கோபமடைந்த ஆங்கிலேயர்கள், அரசாங்கத்தை அவமதித்ததாகவும், சுதந்திரத்திற்காகப் பொதுமக்களைத் தூண்டியதாகவும் அவர் மீது வழக்குகள் பதிவு செய்து, இரட்டை ஆயுள் தண்டனை விதித்தார்கள்.து. இதன் காரணமாக, 1908ஆம் ஆண்டு கோவை சிறையில் அடைத்தும் வ.உ.சி அவர்களைச் செக்கிழுக்க வைத்தார்கள்.

தமிழ்நாட்டு மக்களால் பெரிதும் போற்றப்படும் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. பல்வேறு இன்னல்களுக்கு இடையிலும், தாய்மொழியான தமிழ்மொழி மீது கொண்டிருந்த தணியாத பற்றின் காரணமாக பல அரிய நூல்களைப் படைத்தார். சுயசரிதையைக் கவிதை வடிவில் எழுதினார். திருக்குறளுக்கு உரை எழுதினார். தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தூத்துக்குடியில் வ.உ.சி அவர்களுக்குச் சிலை நிறுவி 5.9.1972 அன்று பிரதமர் இந்திரா காந்தி அவர்களை அழைத்துத் திறந்து வைத்தார்கள். அப்போது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிரதமரிடம் விடுத்த வேண்டுகோளின்படி, 1975 முதல் 1976 வரை தூத்துக்குடியில் கட்டிமுடிக்கப்பட்ட 4 கப்பல் தளங்களுக்கு ஒன்றிய அரசினால் செக்கிழுத்த செம்மல் வ.உ.சி அவர்களின் பெயர் சூட்டப்பட்டது. 1998ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் எழுதிய 16 நூல்களும் அரசுடைமையாக்கப்பட்டன.

முதலமைச்சர் அவர்கள், 3.9.2021 அன்று சட்டப்பேரவையில் வெளியிட்ட அறிவிப்பின்படி, நம் தேசத்தின் விடுதலைக்காகத் தம்மையே அர்ப்பணித்தும் அயராது பாடுபட்டும், தாய் நாட்டிற்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்து, மறைந்தும் மக்களின் மனங்களில் என்றும் நிறைந்தும் வாழ்கின்ற, கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களின் 89ஆவது நினைவு நாளான நவம்பர் 18 அன்று “தியாகத் திருநாள்” தமிழ்நாடு அரசின் சார்பில் கடைப்பிடிக்கப் பட்டுப் போற்றப்படுகிறது.

இந்த ஆண்டின் தியாகத் திருநாள் நிகழ்ச்சியில், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள், துணை மேயர், உள்ளாட்சி பிரநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கிறார்கள்.




தி.மு.க. இளைஞர் அணி

**புதிய நிர்வாகிகளுக்கான 2026 தேர்தல் பணி பயிற்சி பாசறைக் கூட்டம்**

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து, புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள், பகுதி வாரியாக நடைபெற உள்ளன. மண்டலம்–1, சென்னை வடக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட இராயபுரம் கிழக்குப் பகுதி, மேற்குப் பகுதி, பெரம்பூர் வடக்குப் பகுதி, தெற்குப் பகுதி, ஆர்.கே.நகர் கிழக்குப் பகுதி மற்றும் மேற்குப் பகுதி ஆகிய பகுதிகளில் பயிற்சிப் பாசறைக் கூட்டம் கீழ்க்காணும் தேதிகளில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | பகுதி | இடம் |
|---|---|---|---|
| 22.11.2025 சனிக்கிழமை | மாலை 5.00 மணி | பெரம்பூர் தெற்குப் பகுதி | சீலம் மஹால், எத்திராஜ் சாமி சாலை, கொடுங்கையூர். |
| 23.11.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | ஆர்.கே.நகர் மேற்குப் பகுதி | மரியம் மாளிகை, எண்ணூர் நெடுஞ்சாலை, கொருக்குப்பேட்டை |
| | மாலை 5.00 மணி | இராயபுரம் மேற்குப் பகுதி | ஸ்ரீபேலஸ் திருமண மண்டபம், சூரிய நாராயண தெரு, இராயபுரம் |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 12.11.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி